***கவனிக்க.***-*2020.01.03 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி* II *பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2158 - 2020 ජනවාරි මස 09 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.01.09**

*2158 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 10 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 12 |


***கவனிக்க.***- (i) *அரசியலமைப்புக்கான இருபத்திரண்டாவது திருத்தம் சட்டமூலம் 2019, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

(ii) *அரசியலமைப்புக்கான இருபத்தோராவது திருத்தம் சட்டமூலம் 2019, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.*

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2020, சனவரி மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, சனவரி மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*


***கங்கானி லியனகே,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


9- B 81594 - 353 (2020/01)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேற்கு மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின், ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) லக்ஸ்மேந்த்ர தமயன்த்குமார தென்னகோன் ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1994.02.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 38000 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ஹிண்டகொள்ள, பண்டாரகொஸ்வத்த எனும் முகவரியில் வசிக்கும் ஜயசிங்ஹ முதியன்சேலாகே கமலாவதீ என்பவருக்கு கையளிக்கப்பட்டு, குருநாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் D 234/947/94 கீழ் இலக்கத்தின் கீழ் 1994.03.17 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது பின்னுரித்துக்கு இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.01.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவின் தேவமதி பற்றில் திஸ்ஸவ கோறளையிலுள்ள 1361 – ஹம்மாலிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஹிந்தடகொள்ள எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 2275 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 65 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் 0.185 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: காணியின் பெயர் ஹம்மாலியவத்த:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 62 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 64 மற்றும் 71 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 70 ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 77.

லக்ஸ்மேந்ர தமயன்த்குமார தென்னகோன்,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட),
பண்டுவஸ்நுவர - மேற்கு.

பிரதேச செயலகம்,
பண்டுவஸ்நுவர - மேற்கு
2019, யூலை 22.

01-384/1

---

இணைப்பு 9

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

வடமேற்கு மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின், ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) லக்ஸ்மேந்த்ர தமயன்த்குமார தென்னகோன் ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1986.05.20 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 14600 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான வல்பாலுவ, மண்டபொல எனும் முகவரியில் வசிக்கும் ரணசிங்ஹ முதியன்சேலாகே சிறிசேன என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருநாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் D 76/968/90 ஆம் இலக்கத்தின் கீழ் 1990.07.05 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது பின்னுரித்துக்கு இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.01.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

### அட்டவணை

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் கிராதலான கோறளையினுள்ள

359 – திக்கலகெதர கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த வல்பாலுவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குருநாகல் நில அளவை அத்தியட்சகரின் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 1736 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 40 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் 0.605 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: காணியின் பெயர் தன்கஹமுலஹேன:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 41 மற்றும் 42 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 42 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 39, பிரவேசிக்கும் வழி ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 39, பிரவேசிக்கும் வழி 41.

லக்ஸ்மேந்ர தமயன்த்குமார தென்னகோன்,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட),
பண்டுவஸ்நுவர - மேற்கு.

பிரதேச செயலகம்,
பண்டுவஸ்நுவர - மேற்கு
2019, ஒற்றோபர் 22.

01-384/2

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப் பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேற்கு மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) லக்ஸ்மேந்த்ர தமயன்த்குமார தென்னகோன் ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1994.02.21 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 39659 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான ஹிந்தகொள்ள, பண்டாரகொஸ்வத்த எனும் முகவரியில் வசிக்கும் ரணசிங்ஹ வசரப்பெரும ரணசிங்ஹ ஆரச்சிலாகே பொடிஅப்புஹாமி என்பவருக்கு கையளிக்கப்பட்டு குருநாகல் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் D 234/991/ 94 ஆம் இலக்கத்தின் கீழ் 1994.03.18 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது பின்னுரித்துக்கு இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.01.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

குருணாகல் நிர்வாக மாவட்டத்தின் பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவின் தேவமேதி பற்றில் திஸ்ஸவ கோறளையிலுள்ள 1361- ஹம்மாலிய கிராம அலுவலர் பிரவைச் சேர்ந்த ஹிந்தகொள்ள எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் குருநாகல் நில அளவை அத்தியட்சகரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2275 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 107 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் 0.385 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: காணியின் பெயர் - அம்பகஹமுலஇஸ்மத்தெஹேன:

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 02 மற்றும் 106 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 42 மற்றும் 106 ;
தெற்கு : காணித்துண்டு இலக்கம் 42 மற்றும் 108;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 02.

லக்ஸ்மேந்ர தமயன்த்குமார தென்னகோன்,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட),
பண்டுவஸ்நுவர - மேற்கு.

பிரதேச செயலகம்,
பண்டுவஸ்நுவர - மேற்கு
2019, ஓகத்து 06.

01-384/3

---

இணைப்பு 9

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப் பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்**

வடமேற்கு மாகாண சபையின் குருநாகல் மாவட்டத்தில் அமைந்துள்ள பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின், ஆணையாளர் (மாகாணங்களுக்கு இடைப்பட்ட) லக்ஸ்மேந்த்ர தமயன்த்குமார தென்னகோன் ஆகிய நான் காணி

அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உட்பிரிவின், கீழ் அதி உத்தமராம் சனாதிபதி அவர்களால் 1985.01.22 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள குரு/ப்ர 11068 ஆம் இலக்க அளிப்புப் பத்திரத்தின் உரிமையாளரான கம்புறாபோல, முணமல்தெனிய எனும் முகவரியில் வசிக்கும் முது மதினலாகே எமலின் நோனா என்பவருக்கு கையளிக்கப்பட்டு குளியாபிட்டிய மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் குலி/ எச்/ 1/ 50 ஆம் இலக்கத்தின் கீழ் 1986.09.25 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்ட ரீதியான உரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்படவில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால், குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற்கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2020.01.27 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

குருநாகல் நிர்வாக மாவட்டத்தின் பண்டுவஸ்நுவர மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் யடிகஹ வடக்கு கோறளையிலுள்ள 1402 - கம்புறாபொல கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த கம்புறாபொல எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவையாளர் அத்தியட்சகர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்டு 2151 ஆம் இலக்க துண்டு பிரிக்கும் வரைபடத்தில் 79 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டதும் 02 ஏக்கர் 01 றூட் 08 பேர்ச் விஸ்தீரணமுள்ளதும் கீழே தரப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு: காணியின் பெயர் கம்புறாபோல வத்த

வடக்கு : காணித்துண்டு இலக்கம் 77 ;
கிழக்கு : காணித்துண்டு இலக்கம் 78 ;
தெற்கு : அணுகுமுறை பாதை ;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 80.

லக்ஸ்மேந்ர தமயன்த்குமார தென்னகோன்,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கு இடைப்பட்ட),
பண்டுவஸ்நுவர - மேற்கு.

பிரதேச செயலகம்,
பண்டுவஸ்நுவர - மேற்கு
2019, யூலை 22.

01-384/4

---

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/32776.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : பலாத்/இகொ/இ2/இப்/தீப/4(4).

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குருநாகல் மாவட்டம் இப்பாகமுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 422 தேவகிரிய கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த தேவகிரிய எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப். வி. பி. 2818 ஆம் இலக்க வரைபடத்தில் 39 ஆம் இலக்க காணித்துண்டு இலக்கம் 1 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.0230 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை சங்கத்தின் நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டு வரையறுக்கப்படாத தேவகிரிய சிக்கனம் மற்றும் கடன் உதவிக் கூட்டுறவுச் சங்கம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : பி. எம். தர்மதாச அத்துமீறி அநுபவிக்கும் காணி ;
கிழக்கு : எப். வி. பி. 2818 இல் காணித்துண்டு இல. 39 ;
தெற்கு : பிரதேச சபை பாதை ;
மேற்கு : பாதை.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்.**- ஐந்து (05) வருடங்கள் (2018.01.03 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

(ஆ) **வருடாந்தக் குத்தகை.**- பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட மாண்புமிகு அமைச்சரினால் அனுமதியளிக்கப்பட்ட 2019 ஆம் வருடத்திற்கான அபிவிருத்தி அடையாத பெறுமதியின் 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.

தவணைப்பணம்.- இல்லை.

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) குத்தகைக்காரரினால் இக்காணி சங்கத்தின் நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(எ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஏ) 2019.01.03 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்களாகிலும் முடியும் வரை இந்தக் குத்தகையை நிறைவு செய்யும் நோக்கம் தவிர்ந்த கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் அனுமதிக்கப்படும்;

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

டப்ளியூ. கே. என். நயோமி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
“மிஹிகத மெதுர”.
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, சனவரி 09.

01-330

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல.: 4/10/59670.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : நிஇகொ/ஹம்சூரி/தீபது/08.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21(2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

அம்பந்தோட்டை மாவட்டம் சூரியவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 100 இஹலகும்புக்வெவ கிராம அலுவலர் பிரிவில் பஹலகும்புக்வெவ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் LC/SUR/2014/45 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள 01 ஏக்கர் 05.50 பேர்ச் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காகக் குத்தகைக்கு தருமாறு கேட்டு திரு. ரஹதுன் முதியன்சலாகே கெதர விஜயவண்டா என்பவர் விண்ணப்பித்துள்ளார் என இத்தால் அறியத்தரப்படுகிறது.

02. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு :-

வடக்கு : அரச காணி ;
கிழக்கு : மீகஹஜந்துர குளத்திற்கான ஒதுக்கு;
தெற்கு : அரச காணி ;
மேற்கு : இஹலகும்புக்வெவ வீதி.

03. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக் கூடியதாய் இருக்கின்றது. ஆகவே அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனை கட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக் காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2019.10.28 ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி) ;

**வருடாந்தக் குத்தகை**.- 2019 ஆம் வருடத்திற்கான காணியின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியன்களுக்கு (ரூபா 5,000,000.00) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்தக் குத்தகையாக கொடுபடல் வேண்டும். 2019 ஆம் வருடத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான ரூபா 5 மில்லியனுக்கு (ரூபா 5,000,000.00) அதிமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4% வருடாந்த குத்தகையாக கொடுபடல் வேண்டும். இக்குத்தகைப் பணம் ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப்பணம் முடிந்த ஐந்து வருடங்களில் இறுதியில் கொடுபட்ட வருடாந்தக் குத்தகை பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்.

*தவணைப்பணம்*.- அறவிடப்படமாட்டாது.

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் ;

(ஊ) 2019.10.28 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 05 வருடங்கநிறைவுபெறும் வரையினும் இக்காணி குத்தகைக்குப் பெற்ற நோககத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ் குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்பட்ட மாட்டாது.

(எ) பிரதேச செயலாளர், மாகாண காணி ஆணையாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி, இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக் குத்தகை கட்டுப்படும்.

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்.

(ஐ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

04. இக் காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரித்த தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாது விடின் இக்குத்தகை வழங்கப்படும்.

புபுதி பிரேமதாச
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களம்,
"மிஹிகத மெதுர".
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2020, சனவரி 09.

01-331